Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு ௵ (1889)ஆ ஆனை மீ 2௨ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எகூ] யாழ்ப்பாணம்:- குரோதிஞு ஆவணி மீ உ௦உ வெள்ளிக்கிழமை (4 September. 1964) [இல-உ௨]

இந்துசமயம்: ஜி. ஸி. ஈ.

## மாதிரி வினு விடைகள்

[வரலாறுகள்]

[ ஆசிரியர் திரு. ஆ. நவரத்தினம் அவர்கள் ]

(முற்றொடர் — 4)

**2. நல்லாழி நாரணர்க்கு அருளிய வரலாறு:**

சலந்தரனை அழித்த ஆழிப் படையைப் பெறக் கருதித் திருமால் சிவபெருமானது திருவடியைத் தினமும் ஆயிரம் ஆயிரம் மலர்களிட்டுப் பல நாட்களாகப் பூசித்துவந்தார். ஒருநாள் வழிபாட்டின் போது ஒரு மலர் குறைந்தது. குறையவே, தம் கண்களிலொன்றைத் தோண்டி மலருக்குப் பதிலாக இட்டு வழிபாட்டை நடாத்தினர். திருமாலின் அன்பிற்குகந்து இறைவன் அவ்வாழிப் படையைக் கொடுத்தருளினர் என்பது வரலாறு.

**இவ்வரலாற்றல் பெறப்படும் உண்மைப் பொருள்:**

தம்மையே இறைவனுக்கு அர்ப்பணித்து அவரை மெய்யன்போடு வழிபடுகின்ற அடியார்க்குத் தவருது அருள் புரியும் இறைவனின் பெருங் கருணைச் சிறப்பு இங்குபேசப் படுகின்றது.

**3. பனித்திளந் திங்கள் படர்சடை முடியிடை வைத்த வரலாறு:**

தக்கன் இருபத்தேழு பெண்களைப் பெற்று அவர்களைச் சந்திரனுக்குத் திருமணஞ் செய்து வைத்தான், சந்திரனை இருபத்தேழு மனைவியரிடத்தும் ஒரே தன்மையாகவே அன்பு செலுத்த வேண்டும் என்றும், எவரிடத்தும் பாரபட்சங் காட்டக்கூடாதென்றுங் கூறி மனைவிமார்களுடன் அனுப்பி வைத்தான், இருப்பிடத்தை அடைந்த சந்திரன் தம் மனைவியர் எல்லோரிடத்தும் ஒரேவிதமான அன்பு காட்ட எண்ணினன். அப் பெண்களுள் கார்த்திகையும் உரோகணியும் மற்றவர்களிலும் பார்க்க அழகில் கூடியவர்களாய் இருந்தமை கண்டு அவ் விருவர்மேலும் கூடிய காதல் வைத்தான் மற்றவர்களோடு சற்று வெறுப்பாய் நடந்துவந்தான். இவர்கள் இந் நிகழ்ச்சியைத் தந்தையாகிய தக்கனிடம் சென்று முறையிட்டார்கள். தக்கன் கோபமடைந்து "சந்திரனுடைய பதினறு கலைகளும் தேய்ந்து அழிந்துபோகுக" என்று சபித்துவிட்டான்.

தக்கனிட்ட சாபத்தால் சந்திரன் நாளாந்தம் ஒவ்வொரு கலையாகக் குறைந்து பதினைந்தாம் நாள் ஒரு கலையோடு சிவபெருமானைச் சென்றடைந்து தனக்கு அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்திக்க இறைவனும் இரங்கி சந்திரனைத் தம் சடாமுடியின்கண் சேர்த்து "இனி நீ கவலை கொள்ளாதே. என் முடியைச்சேர்ந்த சிறப்பினல் தக்கன் சாபம் உன்னைச் சாராது அழிவற்றிருப்பாய் அன்றி உன் பழைய கலைகள் யாவும் பதினைந்து நாட்களில் நிரம்பிப் பின் மூறையாகத் தேய்ந்து ஒருகலை மட்டுமிருக்கும். இது எக்காலமும் நிகழும்." என்று அருளிச் செய்தார், சந்திரனும் இறைவனை வணங்கி விண்ணிற் சென்று வளர்தலும் தேய்தலும் பெற்றுத் திகழ்ந்தான், இங்கும் இறைவன், தம்மைச் சார்ந்தவர்க்கருளும் செம்மையார் என்னும் பெருங்கருணைச் சிறப்பியல்பு பேசப்படுகின்றது.

**இருவருமறியா வண்ணம் ஒள்ளெரியாயுயர்ந்த வரலாறு:**

ஒரு முறை படைப்புத் தொழிலின்போது பிரமாவும் திருமாலும் தங்கள் தங்களாலேயே படைப்புத் தொழில் நிகழ்கின்றதென்று மிகுந்த ஆணவங் கொண்டனர் இருவர்க்குமிடையே அகந்தை தலையேறிப் போர் மூண்டது. அண்ட சராசரங்களும் அதிரும்படி இருவரும் தத்தப் படைக்கலங்களைச் செலுத்தினர். தேவர்கள் நடுங்கினர்; சிலர் கைலை நோக்கி ஓடினர். இந்தநேரத்தில் நாரதர் அவர்

தொடர்ச்சி 4-ம் பக்கம்


### நற்சிந்தனை

மாண்டார் மனத்தானை
மண்விண்ணு மொன்றுகி
நீண்டானை நெஞ்சமே
நீநினைப்பாய் — வேண்டாமை
வேண்டுவோர் வீடு
பெறுவாரே வையத்தை
ஆண்டாலும் என்னும் அறி. (5)

### யோகசுவாமிகளின் அஸ்திப் பிரதிஷ்டை

அண்மையில் சோதியுட் கலந்த கொழும்புத்துறை யோகசுவாமிகளின் புனித அஸ்தியில் ஒரு பாகத்தை 9 9-64 புதன்கிழமை காலை 6-34 — 7-22 மணிக்கிடையில் வரும் கன்னியிலக்கின சுப வேளையில் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் பிரதிட்டை செய்யப்படுமெனவறிகின்றோம் இந்த வைபவத்தில் யாழ்ப்பாணத்திலும் பிறவூர்களிலும் உள்ள அடியார்கள் கலந்துகொள்வார்கள்.

### ரத்நரதமேறிவரும்செல்வ!



(அளவையூர் — சஞ்சீவி)

பேரான உலகெலாம் பேணியருள் செய்திடும்
பெருமாட்டி தந்த மகனே
பிரணவத் துட்பொருளைப் பரமனெரு செவியிலே
பேசுமருள் ஞான வடிவே
சூராதி யவுணரைக் கூரான வேலினல்
தூள்படச் செய்த முருகா
சுந்தரா கந்தா சுகந்தரும் குருபரா
சோதிமயி லேறு மழகா
தீராத வினைதீர்க்கும் சிவசுப்ர மண்யனே
சேவலங் கொடி வீரனே
செந்தமிழ் தந்தநம் செல்வனே தினமுமுனைச்
சிந்திக்கும் செல்வ மருள்வாய்
சீரான வேலோடு தெய்வகுஞ் சரிவள்ளி
திருமருங் கழகு செய்யச்
சித்திரப் பொற்பதும ரத்நரத மேறிவரும்
செல்வனே நல்லூர்க் கந்தனே!

திருவியலூர் — உய்யவந்ததேவநாயனர் அருளிச்செய்த

## திருவுந்தியார்

மூலமும் — உரையும்

[ சைவப்புலவர் திரு இ. செல்லத்துரை அவர்கள் ]

(முற்றொடர் - 6)

உள்ள முருகி யுடனுவா ரல்லது
தெள்ள வரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீபற. 7.

கொ - கூ: (ஆன்மாக்கள்) உள்ளம் உருகி (நிற்றலினல் இறைவன்) உடனுவார்; அல்லது, (அவர்) தெள்ள அரியர்; என்று உந்தீபற. (மேலும் அவர்) சித்(து) பர(ம்) செல்வர், என்று உந்தீபற.

உரை: உள்ளம் உருகி - ஆன்மாக்கள், அக்கினியைச் சேர்ந்த மெழுகுபோல மனம் கசிந்து உருகி நிற்கும் முறைமையினலே,

உடனுவார் - (அவ்வான்மாக்கள்) இறைவனுடன் இரண்டறக் கூடிநிற்க முடியும்;

அல்லது - அம்முறைமை இன்றி,

தெள்ள அரியர் - (தம் அறிவும் செயலுமாகிய) பசு ஞான பசு போதங்களால் ஆராய்ந்து, தெளிந்து, அறிந்து அடைதற்கு அவ்விறைவன் அரியவராவர்,

என்று உந்தீபற - ... ... ...

சிற்பரச் செல்வர் - (மேலும் அவர்) அழிவற்ற உண்மை ஞானமாகிய திருவருட் செல்வத்தை உடையவர்.

என்று உந்தீபற - .... ... ... ...

விளக்கவுரை: இச்செய்யுளில், இறைவன் பசு ஞான பசு போதங்களால் அடைதற்கரியன் என்பதும் சிவஞான சிவபோதங்களாலேயே அடைதற்குரியன் என்பதும் கூறப்பட்டன. மெழுகு அக்கினியோடு இரண்டற நின்ற சூட்டான் உருகி, அவ்வக்கினியோடு கலந்து நிற்குமேயன்றி, வேறு எவ்வாற்றனுக் அதனை அடையமாட்டாமை போல, ஆன்மாவும், இறைவனேடு இரண்டற நின்ற திருவருளான் மனங்கசிந்துருகி அவனை அடையுமன்றி; வேறு எவ்வாற்றனும் அடைதல் இலதாம். எனவே, உள்ளம் உருகி அவன் வழிப்பட்டு நிற்றற்கு; அவனது ஞானச் செல்வமாகிய திருவருளே இன்றியமையாதது என்பார், அதனைக் குறித்துச் 'சிற்பரச் செல்வர்' என்றார் என்க. "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்னும் மணிவாசகமும் இதற்குச் சான்றுதல் உணர்க.

இதனைத் திருக்களிற்றுப்படியார் எட்டுச் செய்யுள்களால் விரித்து விளக்குகின்றது. அச்செய்யுள்களும் பழையவுரையும் வருமாறு:

உள்ள முதலனைத்தும் ஒன்றய் ஒருவவரின்
உள்ளம் உருகவந் துன்னுடனும் — தேள்ளி
உணருமவர் தாங்கள் உளராக என்றும்
புண்ருவா னில்லாப் பொருள். 14.

"பிருதுவி முதல் நாதம் ஈருகிய தத்துவங்களைப் பொருந்தும் முறைமையை அன்னியமாக்க வந்தால், ஆன்மாவாகிய அரக்கு நெகிழும்படிக்கு, நேயமாகிய அக்கினி வந்து உன்னுடனே கூடி நிற்கும். இப்படியன்றி, கருவிகளுடனே கூடி விசாரித்தறிகிற பேருண்டானல் எக்காலமும் விட்டு நீங்காமல் நிற்கிற கர்த்தா இல்லாத பொருள்போல மறைந்து நிற்பன்.

இதனுள், கருவிகளினலே சிவனைக் காணப்படாது என்பது கண்டுகொள்க."

நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழிய — வல்லதனல்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங் காண்
ஆரேனுங் காணு அரன். 15.

"நல்ல சிவதன்மமான சரியையுடையவன், கிரியையுடையவன், நல்ல சிவயோக தன்மத்தையுடையவன், நல்ல சிவஞானத்தையுடையவன் — இவர்களில் யாவராயினும் நானென்கிற தன்மையைகெட்ட வல்லமையினலே அன்பு செய்தார்களாயின், அவர்களிடத்திலே, ஆன்ம

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

—0—

எதிர்வரும் 5, 6-9-64 நல்லூர் தேர், தீர்த்தத் திருவிழாக்களை முன்னிட்டு இந்துசாதன அலுவலகமும் சைவப்பிரகாச அச்சகமும் திறக்கப்படமாட்டா.

- அதிபர்.

THE HINDU ORGAN.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

குரோதி ஹு ஆவணி மீ
௨௦ உ வெள்ளிக்கிழமை


## பத்திரிகைச்சுதந்திரம்

நமது அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பத்திரிகை விசாரணைக் குழுவினறிக்கையும் அதனை அநுசரித்து அரசாங்கம் இயற்றப்போகின்ற சட்டமும் நாட்டில் பெரும் கிளர்ச்சியை உண்டாக்கிவிட்டன. மேற்படி விசாரணைக் குழுவின் அறிக்கையின்படி பத்திரிகையைக் கட்டுப்படுத்துவதற்கென ஒரு பத்திரிகைச் சபையும், ஒரு பத்திரிகை விசாரணைக் கோடும் அமைக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கும் ஒரு சட்டம் தயாரிக்கப்பட்டு மந்திரிசபை அதனைப் பரிசீலனை செய்கின்றதெனவும் அறிகின்றோம். அவ்வாறான சட்டமியற்றப்படின், ஒரு பத்திரிகை நேர்மையுடனும் துணிவுடனும் விஷயங்களைப் பிரசுரஞ்செய்ய வாய்ப்பிராது. அரசாங்கத்தினுடைய கொள்கைகளையும் செயல்களையும் அது பிரசுரஞ்செய்ய இயலுமேயன்றி அரசாங்கம் செய்கின்ற தவறுகளை அது எடுத்துக் கூறுதல் முடியாது. உண்மையான சனநாயக ஆட்சியில் மக்களுடைய பேச்சுச் சுதந்திரமும் எழுத்துச் சுதந்திரமும் காப்பாற்றப்பட வேண்டும். ஒரு பத்திரிகை மக்களின் நலத்தைப் பாதுகாக்கின்ற சாதனமாகும. மக்களுக்கு ஆன்மஞானத்தையும் அரசியல் ஞானத்தையும் அது அளிக்கவல்லது.

சனநாயக ஆட்சியில் மக்கள் எங்ஙனம் தங்கள் வாக்குரிமையை உபயோகிக்க வேண்டுமென்பதையும், தங்கள் உரிமைகளை எங்ஙனம் பெறமுடியும் என்பதை மக்களுக்குக் கற்பிக்கின்ற ஓர் ஆசிரியனைப் போன்றும் ஒரு பத்திரிகை உதவுகின்றது.

பத்திரிகையின் சுதந்திரத்தைப் பாதுகாக்க மக்கள் இதுவரை காட்டிய எதிர்ப்பை அரசாங்கம் கவனித்து ஷெ சட்டத்தில் முக்கியமான சில மாற்றங்கள் செய்யக் கருதுவதாகவும் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. எவ்வாறாயினும் பொதுமக்களுடைய அபிப்பிராயங்களையெல்லாம் நமது அரசாங்கம் கவனித்து மக்களை அடிமைகளாக்கும் தன்மைவாய்ந்த எவ்வித .சட்டத்தையும் இயற்ற முன்வராதென எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையின் பிரதம நீதிபதி திரு. M. C. சான்ஸோனி அவர்கள் பத்திரிகைகளுக்குப் போதிய சுதந்திரம் அளிக்கப்பட்டால்தான் அவை விஷயங்களை நேர்மையாக வெளியிட முடியுமெனவும், பிழைகள் நேர்ந்த வழி அவற்றைக் கண்டிக்க முடியுமெனவும், நன்மைகள் உண்டான இடத்தில் அவற்றைப் போற்ற முடியுமெனவும், அங்ஙனம் தொண்டாற்றினுல் பத்திரிகைகள் நாட்டின் நலனுக்கு உழைக்கச் சந்தர்ப்பங் கிடைக்குமெனவும் ஓர் சொற்பொழிவில் கூறியுள்ளனர்.

பத்திரிகைகள் தவறான வகையில் விஷயங்களைப் பிரசுரஞ் செய்ய நேரின் இப்பொழுதுள்ள சட்டங்களே அவற்றைப் பரிபாலிப்பவர்மீது வழக்குத் தொடர்ந்து தண்டனை புரிந்து அவர்களைத் திருத்தப் போதிய கருவிகளாகவுள்ளன.

## வவனிக்குளத்தில் சிவாலயம்

———0———

பண்டைக்காலத்தில் பாலி நகர் என அழைக்கப்பட்டு, பெரும் புயல் வெள்ளத்தினுல் சிதைக்கப்பட்ட இடமே இன்று வவனிக்குளமெனப் பெயர்பெற்றுளது. வவனிக்குளத்திட்டத்தின் கீழ் மக்கள் குடியேறியபொழுது அங்கு பழமைவாய்ந்த சிவாலயமொன்று பாழடைந்து கிடந்ததைக் கண்டனர். இத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தரும், குடியேற்ற மக்களும், பழங்குடி மக்களும் புதுப்பித்து அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

காடு கெடுத்து நாடாக்கி மனைவி மக்களுடன் வாழ்வு பெற வந்த சைவ மக்கள் வவனிக்குளம் சிவாலயத்தை நன்நிலைக்குக் கொண்டுவரும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பழம் பெருமை வாய்ந்த இந்தச் சிவாலயம்பற்றி ஈழத்து ஆராய்ச்சி எழுத்தாளர் திரு. மு. இராமலிங்கம் அவர்கள் ஒரு கட்டுரையில் "புகழேந்திப்புலவர் கதிர்காமஞ் செல்லும் வழியில் கீரிமலையிலிருந்து வவனிக்குளம் வழியாகச் சென்றார்." என எழுதியுள்ளார். நளமகாராசன் திருக்கோணசலம் செல்லும் வழியில் வவனிக்குளம் சிவாலயத்தினை வணங்கிச் சனிதோஷம் நீங்கினுன் எனவும், அருச்சுனனின் தீர்த்த யாத்திரையில் இச்சிவாலயமும் பூசிக்கப்பட்டதெனவும் கூறுவர். இவ்வாலயத்தின் தொன்மையை அறியுமபொழுது பழம் பெருங்குடிகளும்; மன்னர்களும் வணங்கி அருள்பெற்றனர் என அறியப்படுகின்றது.

ஏறக்குறைய இரண்டாயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆதி எல்லாள மன்னனுல் பூசிக்கப்பட்ட பழம் பெருமையுடையது. இந்த வவனிக்குளப் பகுதியும் பாலிநகர் என்ற பெயருடன் புகழ்பெற்றிருந்தது சரித்திரச்சான்றின்படி கி. மு. 300-ல் பாலி நகரும் அதில் இந்தச் சிவாலயமும் இருந்ததாக அறியலாம்.

மழை குறைவதினுலும், நோய்களாலும், வெள்ளப் பெருக்காலும் பெரும் போரினுலும் மக்கள் இடம்விட்டு இடம பெயர்த்து வாழும் வழக்கம் இன்றும் என்றும் உளது. எனவே, "மூன்னைப் பழம் பொருட்கு மூன்னைப் பழம் பொருள்" ஆய சிவன் இடையிடை மறைந்திருந்தும் பின்னைப்புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியராய் அடியார்களின் கனவுகளில் தமது அருள்பாலித்து வெளிப்படும் இடத்தினை உணர்த்தும் அருட்பாடும் இருந்தே வருகிறது

காணி, நீர்ப்பாசன, மின்சார நிரந்தரக் காரியதரிசி உயர்திரு. ம ஸ்ரீகாந்தா அவர்களதும், நீர்பாசன உதவிப் பெருந்தலைவர் திரு ச. ஆறுமுகம் அவர்களதும், மற்றும் பெரியார்களதும் விடாமுயற்சியும் ஆக்கமும் இவ்வாலயப் பணியைச் செய்வதற்காக ஒரு சபை இயங்கி வருகிறது

வவனிக்குளம் சிவாலயத் திருப்பணிச்சபை ஆட்சி மன்றம் சைவ மக்களின் உதவியைப்பெற்று, வளர்ந்துவரும் இந்த மாபெருந் திட்டத்தில் வவனிக்குள வாவியினருகே சிதைந்துகிடந்த பழமை வாய்ந்த சிவாலயத்தைக் குறுகிய காலத்தில் இப்பணியைச் செய்து முடிக்குமென இறைவனை இறைஞ்சுகிறோம்.

—

நேயர்கள் நெஞ்சம்

## கந்தபுராணப் படிப்பு நாடெங்கும் நிகழ வழிவகுக்கவேண்டும்

கந்தபுராணம் ஆகிய காப்பியத்தை மக்கள் படித்துப் பயன் பெறுங் காலப் பக்குவமுற்றபொழுதுதான் முருகக் கடவுள் கச்சியப்பசிவாசாரியர் மூலமாக அந்தக் கந்தபுராணத்தைப் பாடுவித்தருளினுர்

ஆறுமுகநாவலரையா காலம் முதலாக ஒரு நூற்றாண்டு காலம் யாழ்ப்பாணமெங்கும் சகல தேவாலயங்கள், மடாலயங்கள் இவைகளிற் கந்தபுராணம் படித்துப் பொருள் சொல்லி அதனை மக்கள் நியமமாகக் கேட்டும் வந்திருக்கிறார்கள்.

அக்காலங்களில் மக்களனைவரும் சந்தோஷமான வாழ்வைப் பெற்றிருந்தார்கள்.

இற்றைக்குச் சில காலமாக அந்த வழக்கம் அருகி வாசிப்பவர்கள். பொருள் சொல்பவர்களும் குறைந்துபோய் விட்டனர்,

கந்தபுராணத்தில் இல்லறம் துறவறம், அகப்பொருள், புறப்பொருள், இம்மையின்பம், மறுமையின்பம், பதமுத்தி, பரமுத்தி என்பவைகள் விரித்துக்கூறப்பெற்றிருக்கின்றன,

அகம், புறமாகிய சமயக் கோட்பாடுகளும், குரு, லிங்க, சங்கம பத்திகளும் வலியுறுத்தப் பெற்றுள்ளன.

காவியத்துக்குரிய வருணனைகளின் பின் திருமண வைபவத்திற் தொடங்கித் திருமண வைபவத்தில் பூர்த்திபெற்ற காவியம் கந்தபுராணமொன்றுமாத்திரமே.

கச்சியப்ப சிவாசாரியர் பாடிய சிறு காண்டங்களுள் முதன்மூன்று காண்டங்களுக்கும் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் விருத்தியுரையெழுதி அச்சாக்கியிருக்கின்றார்கள்.

மற்றைய மூன்று காண்டங்களுக்கும் அவசியம் உரை வெளிவர வேண்டுமெனப் பலர் அவாவுகின்றனர்.

ஆதலின் பின் மூன்று காண்டங்களுக்கும் முதலில் உரையெழுதி அச்சாவது விரும்பத்தக்கது.

சைவபரிபாலன சபையார் கிராமப்புறங்களுட்பட யாழ்ப்பாண நாடு முழுவதிலும் கந்தபுராணம் படிக்க வேண்டிய அவசியத்தைப் பொதுக் கூட்டங்களைக் கூட்டிப் பிரசாரம் செய்வது மிகப் பிரதானமான சமயத்தொண்டாகும்.

புலவர் சி. சின்னையா

# நந்தமிழிற் கைவைப்பது நீதியாகுமா?

முத்தமிழ், முச்சங்கங்களில் வளர்ந்த தமிழ்; மூவேந்தர் முரசங்களில் முழங்கிய தமிழ்; திக்கனைத்தும் உலவ்வரும் தீந்தமிழ்; தென்தமிழ் நாட்டுத் தெய்வீகத் தமிழ்; பாவலர் பயின்ற தமிழ்; புலவோர் போற்றுந் தமிழ்; இன்பத் தமிழ்; எம் உயிர்த் தமிழ்; அத் தமிழுக்கு ஆபத்து! அதுவும் இலங்கை அரசாங்கத்தால் ஆபத்து!

"உலகாண்ட தமிழ் உருளைக்கிழங்களவான இலங்கையிலே ஊசலாடும் ஆட்சியிலே நிர்வாக மொழியாக இல்லை. இதுதானே நீங்கள் கூறப்போகும் ஆபத்து" என்று கேட்கிறீர்களா?

இல்லை! இல்லை! இதைவிடப் பெரிய ஆபத்து! எம் தமிழில் ஊடுருவி எம்தமிழை நோயாளியாக்கி இறந்த மொழியாக்கப் போகும் ஆபத்து. அதுதான் நான் சொல்லப்போகும் ஆபத்து.

உங்கள் கீர்த்தனைகளை முன்கூட்டியே அனுப்பிவையுங்கள் அதிலே ஒரு சொல்லுக்கூடத் தமிழ்மொழியைப்பற்றியோ தமிழர் வீரத்தைப்பற்றியோ இருக்கக்கூடாது இதற்கு உடன்பட்டால் உங்கள் குரல் இலங்கை வானெலியில் ஒலிக்கும். இல்லையேல் எதுவும் இல்லை. இவ்வாறு இலங்கை வானெலியில் பாடப்போகும் இசைப்புலவர்கள் கேட்கப்படுகிறார்கள். அவர்கள் தான் என்ன செய்வார்கள்? பேர் பாடவேண்டும் என் தற்காகப் பேசாமல பாடிவிட்டு வருகிறார்கள். இன்று வானெலியில் எம் தமிழுக்கு இடமில்லை நாளை ஈழத் தமிழகத்திலே நடைபெறும் இசைவிழாக்களிலே இடமில்லை.

இதுமட்டுமா? இசை கற்பதற்கு இங்கே நிலையங்கள் இல்லை இந்தியா போவதற்கும் வழியில்லை. இந்தியா போய் வந்தவர்களுக்கு எம் பள்ளிக்கூடங்களில் இடமிருந்தும்வேலைகொடுக்க அரசாங்கத்தற்கு மனமில்லை. இந்த நிலையில் இசைத் தமிழ் வாழுமா? இல்லைவளருமா?.

இந்தியாவிலிருந்து தமிழ்நூல்கள் இறக்குமதியாகக்கூடாது' இது அரசாங்கத்தின் உத்தரவு. இந்த உத்தரவு, ஈழத்தமிழகத்திற்கு வந்துகொண்டிருந்த மின்சக்தியைத் துண்டித்துவிட்டது. அதன்விளைவு......? இயற்றமிழ்ப் பூங்காவிலுள்ள எல்லா விளக்குகளும் அணைந்தன.

"எல்லாச் செய்தித் தாள்களும் அரசாங்கக்கட்டுப்பாட்டின் படிதான் இயங்கவேண்டும். அரசாங்கத்தை எதிர்க்கும் செய்திகள், இனமொழி உணர்ச்சியை ஆதரிக்கும் செய்திகள் எதுவும் இடம்பெறக்கூடாது" இந்த உத்தரவு இயற்றமிழ்ப் பூங்காவில் இயங்கிக்கொண்டிருந்த இயந்திரத்தை (மோட்டார்) உடைத்துவிட்டது, அதன் விளைவு...? இயந்திரத்தின் உதவியால் இயங்கிக் கொண்டிருந்த மின்விளக்குகள் எல்லாம் அணைந்தன.

அரசாங்கம் செய்தித்தாள்களை எடுத்து நடத்துவதாயிருந்தால் அதிக செய்தித்தாள்கள்எதற்கு? 'இலங்கா' ஒன்றுபோதுமே? இலங்காவில் வரும் செய்திகள் தானே ஏனைய செய்தித் தாள்களிலும் வரும்? என்று கேட்கத்தோன்றுகிறதா? கேளுங்கள்! தாராளமாகக் கேளுங்கள்! உங்கள் கேள்விகள் இலங்கை அரசாங்கத்தின் செவிட்டுக் காதில் விழுந்தால்தானே!

இனிப் பாடப் புத்தகங்கள் அரசாங்கத்தால் எழுதப்பட்டு அரசாங்கத்தாலேயேவெளியிடப்படும். இந்த உத்தரவு இயற்றமிழ்ப் பூங்காவில் எம் தமிழர் ஏற்றி வைத்த எஞ்சியிருந்த "பெற்றோல்மக்ஸ்" விளக்குகளையும் அணைத்துவிட்டது.

இனிமேல்இருள்! இயற்றமிழ்ப் பூங்காவில் இருள்!! எவருமே நீக்க முடியாத இருள்!!!

இலங்கை அரசாங்கமே! அதை வழிநடத்தும் அமைச்சர்களே! உங்களுக்கு ஓர் வேண்டுகோள். இவ்வாறு எங்கள் முத்தமிழ்ப் பூங்காவை இருளச் செய்து, எங்கள் அறிவுக்கு அணைபோட்டு, இன்பத்திற்கு உலைவைத்து ஒவ்வொரு நாளும் சித்திரவதை செய்வதைக் காட்டிலும் ஒரேயடியாக அழித்துவிடுவது எவ்வளவோ நலமாகும். எனவே பின்பற்றுங்கள்! அவ்வழியைப் பின்பற்றுங்கள்!! இப்பொழுதே பின்பற்றுங்கள்!!!

இல்லையேல் நீங்கள் கொண்டுவருகின்ற ஒவ்வொரு சட்டமும் ஈழத் தமிழக எல்லை மதிலுக்கு அடிக் கற்களாக அமையும்.

புலவர்
"தமிழ்மாறன்"

## சைவ சமய அறிமுகம்

சைவ சித்தாந்தக் கருத்துக்களை மிகச் சுருக்கமாகவும், தெளிவாகவும் எளிய நடையில் விளக்கிக் கூறும் இனிய நூல் இது. மாணிக்கவாசக ஞானதேசிகர் ஆக்கிய இந்நூலைச் சைவபரிபாலன சபையார் வெளியிட்டுள்ளனர்- விலை சதம்: 50. தேவையானோர் அதிபர், சைவப்பிரகாச அச்சகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## இவ்வாரம் உங்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

உறவினர் நண்பர்களால் உதவி, எதிர்ப்பு இரா, அற்ப சுகக் குறைவு, பண வரவு, திங்கள் செவ்வாய் புதன் காலைவரை எச்சரிக்கை,

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.
1, 2, 3ம் பாதம்

சொந்தச் செயல்கள் நிறைவேறும். உறவினர்பகை, உடல் நிலையில் விருத்தி, பகைவர்க்குத் தோல்வி. புதன் வியாழன் வெள்ளி காலைவரை எச்சரிக்கை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவுந்தியார் (மூலமும்—உரையும்)

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

போதம் உள்ளவர்களுக்குள்ளே ஒருவராலுங் காணுதற்கரிதான சிவன் அப்பொழுதே வந்து கூடுவான் என்று அறிவாயாக.

இதனுள்ளே ஆன்மபோதங் கெட்டவர்கள் எந்தப் பாதத்திலே நின்றாலும ஞானபாதமென்பது கண்டு கொள்க. பாதம் - சரியை கிரியை யோகம் ஞானம்,"

மெல்வினையே யென்ன வியனுலகில் ஆற்றரிய
வல்வினையே யென்ன வருமிரண்டும் — சொல்லிற்
சிவதன்ம மாமவற்றிற் சென்றதிலே செல்வார்
பவகன்மம் நீங்கும் படி. 16;

'மெல்வினை என்று சொல்லவும், விசாலம் பொருந்தின பூமியில் உள்ளார் செய்தற்கரிதாகிய வல்வினை என்று சொல்லவும் வரப்பட்ட இரண்டும் ஆகமத்திலே சொல்லப்பட்ட சிவன் தன்மமாம்: அவை இரண்டிலே, அவ்ரவர் மனம் பொருந்தினதிலே போவார், செனனமும் அந்தச் செனனத்துக்குக் காரணமாகிய கன்மமும் நீங்குமபடிக்கு.

எழுவாய் வருவித்துக்கொள்க. இதனுள், ஞானமானது மெல்வினை என்றும், வல்வினை என்றும் இருவகைப்படும் என்பது கண்டுகொள்க. பத்தி வைராக்கியம் எனினுமாம்."

ஆதியை அர்ச்சித்தற் கங்கமும் அங்கங்கே
தீதில் திறம்பலவும் செய்வனவும் — வேதியனை
நல்வினையாம் என்றே நமக்கும்எளி தானவற்றை
மெல்வினையே யென்றதுநான் வேறு. 17

"கர்த்தாவை வழிபடுதற் கங்கமான அந்தரியாகப் பூசையையும், பகிரியாக பூசையையும், அந்தந்த அவசரங்களிலே செய்யும் பஞ்ச சத்தி முதலான கூறுபாட்டையுடைய குற்றமற்ற பல கிரியைகளையும், அனுட்டான முதலான கிரியைகளையும், நான் வேறுபடுத்தி மெல்வினை என்று சொன்னது, சித்து அசித்துக்களோடு கலந்திருக்கிறவனே, அரிய தொழில் செய்யப்படாத நமக்கும் எளிதாயிருக்கிற இவற்றை நல்வினையாம் எனக்கருதி.

இதனுள், மெல்வினைக்கு வகை சொன்னது கண்டு கொள்க,"

வரங்கடரும் செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினால் அன்றகறி யாக்க — இரங்காதே
கோல்வினையே செய்யுங் கோடுவினையே யானதனை
வல்வினையே யென்றதுநான் மற்று. 18

"பலன்களைத் தரப்பட்ட, சிறப்பாக வைரவ வேடத்தைப்பூண்ட சிவனுக்குக் கறியமுது சமைக்கும்பொருட்டுத் தயவில்லாமல் ஆதியிலே மாதா பிதாக்கள் தங்கள் கைகளினாலே பிள்ளையை அறுத்தலைச செய்யும் கொடிய வினையையே நான் வல்வினை என்று சொன்னது.

மற்று - அசை, செயப்படுபொருள் வருவிக்க. (சிறுத்தொண்டர்) கதைச்சுருக்கம் உரைக்க."

பாதகமே யென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டும் — சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
தண்டீசர் தஞ்செயலால் தான். 19.

"சண்டேசுரமூர்த்தி ஒருவர் ஏவாமல் தம்முடைய பத்தியினாலே கொலைத்தொழில் என்றும் தோடம் என்றும் விசாரியாமல் தகப்பனாகிய பிராமணனுடைய காலிரண்டையும் சிவத்துரோகத்தினாலே (-சிவத்துரோகங் காரணமாக) வெட்டிப்போடுதலைக் கர்த்தாவானவர் கண்டு சிவனாயிருக்கிற முறைமையைக் கொடுத்தார். இந்தப் பத்தியை அறிவாயாக."

செய்யில் உகுத்த திருப்படி மாற்றதனை
ஐய இதுவமுது செய்கென்று — வையவிருந்(து)
ஊட்டி யறுத்தவர்க்கே ஊட்டி அறுத்தவரை
நாட்டியுரை செய்வதே நாம். 20.

நாம் பத்திபண்ணினவர்களுக்குள்ளே மேம்பட்டவரென்று நாட்டிச் சொல்லுவது யாரையென்றால்;: கமர் நிலத்தின்கண்ணே கொட்டுதலாலே மாறிப்போன படிக் கட்டளையை, 'ஐயனே, இப்படிச் சோர்ந்து போனதை அமுது செய்வாயாக' என்று மனதிலே பயமில்லாமல் தமமுடைய கழுத்தை அறுத்து அந்தக் கர்த்தாவுக்கு (அப்படிக் கட்டளையைப்) புசிப்பித்து மூன்று பாசத்தையும் விடுத்தவரையே

இவை மூன்று செய்யுளிலும் வன்வினைக்கு வகை சொல்லப்பட்டது. இப்படிப் பலப்பல வகையுண்டென்பது கருத்து. அவையெல்லாம பெரிய புராணத்துக காண்க. (அரிவாட்டாய நாயனார் கதைச் சுருக்க முரைக்க)"

செய்யும் செயலே செயலாகச் சென்றதமைப்
பையக கொடுத்தார் பரங்கெட்டார் — ஐயா
உழவும் தனிசும் ஒருமுகமே யானல்
இழவுண்டோ சொல்லாய் இது. 21

"சீடனே, உழ்வுத்தொழில் செய்கிறவனுக்கும் அதனை ஏவுகிற கர்த்தாவுக்கும் புத்தி ஒரேபடித்தாய் இருந்ததேயானல் அந்தத்தொழில செய்கிறவனுக்கு ஒருகாலும் குறைவராது, இதுபோலத் தாங்கள் செய்யும் செயலிலே கர்த்தாவினுடைய செயலாகப் பொருந்தித் தங்களைக் கிரமத்திலே கர்த்தாவுக்குக் கொடுத்தவர்களே ஆன்மபோதமாகிய சுமையை இறக்கிச் சுகமாய் இருப்பார்கள்.

உழவுக்குப் பெயர் தனிசு; திசைச்சொல். இதனுள் ஆன்மபோதமிறந்த அறுபத்து மூவர் முதலான பெரியோர்களைப் பொதுப்படக் கூறி வல்வினைக்கு விரிவு சொன்னது கண்டுகொள்க."

—தொடரும்.

நல்லூர்க் கந்தன்

## கைலாசவாகனத் திருவிழா

### ஆற்றுப் படை

(ஈழுச்சேனு)

கைலாச வாசனத் திருவிழாக் காண
நல்லூர் செல்லும் நங்கை ஒருத்தி
'விளாம்பழப்' புலவரின் வீட்டினை அடைந்து
பணிவுடன் அவரைப் பார்த்துப், "புலவரீர்!
அடியேன், நல்லூர் அறியேன்; அறுமுகன்
கைலாச வாகனத் தெழுந்தருள் காட்சியைக்
காண விரும்பினன்; காணுமாறு எதுவோ?
நீங்களோ அங்கு நாள்தொறும் செல்பவர்
தயவுசெய் தவ்வழி தெரிவிப் பீர்'' என
மொழிந்தனள். புலவர் மனம்பல நினைந்தது;
இரண்டொரு நிமிடம் இருந்தனர் மௌனமாய்;
சுரந்திடும் இழிவாற் சுவையுடன் அந்த
நங்கையை நோக்கி நவிலத் தொடங்கினர்:
பெண்ணே! திருவிழா என்னும் பேரினில்
கண்ணை மயக்கிக் கருத்தினை அழிக்கும்
களியாட் டத்தையே கைலாச வாகனத்
திருவிழா என்று தெரிவிப் பாரதன்
திற தேர்ந் துணர்ந்து தரிசிப் பதற்கென
ஒருவழி உரைப்பன் உற்றுக் கேட்பாய்;

1. 'இ. போ. ச.' மோட்டார்ப் பயண ஆற்றுப்படை

வடதிசை இருந்து தென்திசைச் செல்லும்
மோட்டார் வண்டியை மறிப்பா யாயின்
இடமிலை யயினும் உடனே நிறுத்துவர்;
சில்லறை உண்டா? என்பர்; — சிரிப்புடன்—
'ஓம்'என்று உரைத்தால் உள்ளே 'தள்ளுவர்'
படியில் ஏறிநீ முகட்டுத் தடியைப்
பிடிப்பதன் முன்னர் வண்டி புறப்படும்!
அதனால்,
'விழுந்து விடுவோம்' என்றுநீ அஞ்சேல்!
பழுதை சுமக்கும் கழுதைகள் போல
ஆடவர் பெண்டிர் அத்தனை பேரும்
ஆளொரு குழந்தையை அல்லது பொதியைத்
தூக்கிச் சுமந்து திசைக்கொரு துணையாய்
உன்னைத் தாங்கி ஈடா டாமல்
வைத்திருப்ப ரதலின் விழுவ தெங்ஙனம்?
அருகில் ஆண்கள் நெருக்கி நிற்றலால்
அருவருப் புண்டாம்; ஒருதனி வெட்கமும்
கூச்சமும் வந்து குறுகிடச் செய்யும்;
வீடு திரும்பும் வேட்கையும் வந்திடும்
ஆயினும்,
முன் வைத்த காலைப் பின்வைக்க லாமோ?
ஆணுக்குப் பெண்ணிங் கிளைத்தவ ளாவளோ?
சரிநிகர் சமானம் இல்லையா? ...... சரிசரி!
என்று தேறி எவ்வித இடரையும்
பொருட்படுத் தாமல் போவா யாயின்,
படலைக் கொருதரம் 'பட்க்'கென நிறுத்துவர்;
இறக்குதற் கன்று! ஏற்றுதற் காக!
அப்பொழுது,
முன்னும் பின்னும் மெய்படத் தோய்ந்து,
இன்னும் இதுபோல் எப்போ தோவென
ஊஞ்ச லாடி இன்பம் பெறுவாய்!
இத்துணை இன்ப அநுபவந் தந்து,
முத்திரைச் சந்தைப் மெத்தென அடைந்த
அற்புத வண்டி, உரைமணி நிற்கும்!
நின்றதும்,
பெட்டியில் அடைந்து கொட்டிய பஞ்சு
குமிறிப் பெருகும் கோலம் போலவும்,
தடியால் தள்ளத் தன்செயல் இன்றி,
பிதுங்கி வருங்குழற் பிட்டுப் போலவும்,
மிண்டித் தள்ளும் மக்களின் துணையால்
வண்டியில் இருந்து வெளிவரு வாருடன்
அம்மா நீயும் இறங்குவை சுகமாய்.
அதன்பின்?

(தொடரும்)

இவ்வாரம் 6-9-64 — 12-9-64

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

புதுச்செயல்கள் வெற்றி. பணவரவு, விவசாய விருத்தி, பிறரால் உதவி, உடல் நலக்குறைவு, வெள்ளி பிற்பகல் சனிவரை எசசரிக்கை.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

உறவினர் நண்பர்களுடன் கருத்து வேறுபாடும், கலகமும் உண்டாகும். கண்நோய் காணப்படும். நிம்மதி குறையும். புதுச் செயல்களில் கவனம்.

மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்,

சுகக்குறைவு, [illegible] கம், அதிக செலவும், அதற்கேற்ற வரவும் உண்டு,

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

சுகக்குறைவு, பழைய முதலீடுகளால் பலன், பகைவர்க்குத் தோல்வி, உடன் பிறந்தாரால் (மூத்த சகோதர சகோதரிகளால்) உதவி,

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

பண வரவு, சொற்ப நட்டம், அலுவலகத்தில் தொந்தரவு. புதுச் செயல்களில் தலையிடுவது புத்தியல்ல,

கன்னிராசி உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2. பாதம்.

உழைப்பில்லாமல் வெற்றியும், இலாபமும் உண்டு. எதிர்ப்புகள் இரா, நில நன்மை உண்டு, சில வேளைகளில் சுகக்குறைவும் உண்டு.

துலாம், சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

உடல் நிலையில் விருத்தி. குடும்பத்தில் நன்மை. புதுச்செயல்கள் தாமதத்துடன் நிறைவேறும். தந்தைவழி உறவினரால் தொந்தரவு, நண்பரால் உதவி.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணவரவு, புதுச்செயல்களில் பலன், சொந்தச் செயல்களில் முன்னேற்றம், பொது வாழ்வில் வெற்றி.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்பத்தில் தவறான கருத்துகளுக்கு இடமுண்டு. நினைத்தவை நிறைவேறு, சுகக்குறைவு.

மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

முதல் நாளில் கவனம், நண்பர்களால் கலகம், பண இலாபம். பகைவர்க்குத்தோல்வி.

தொடர்ச்சி 2ம் பக்கம்

## அச்சுத் தொழிலாளரின் கதி என்ன?

அச்சுத் தொழிலாளரின்
ஏகோபித்தகோரிக்கை

"அரசாங்கம் பாடபுத்தகங்களை எடுப்பது முறையன்று, அப்படி எடுப்பதாயிருந்தாலும் அதனல் பாதிககப்படும் அச்சுத்தொழிலாளருக்கு அரசாங்கம் வேலை கொடுக்குமா?" இவ்வாறு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 2 9-64 அன்று நடைபெற்ற அச்சுத்தொழிலாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசும்பொழுது நம சிவப்பிரகாசம் அவர்கள் குறிப்பிட்டார்.

திரு.சி. நாகராசா அவர்கள் தமது தலைமை உரையில் "அரசாங்கம் புத்தகங்களை அச்சிடும்பட்சத்தில் அதனல் வேலையிழக்கும் அச்சுத்தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பது அதன் கடமை" இது எங்கள் கோரிக்கை, நீதியான கோரிக்கை. இக்கோரிக்கையைத் தனியே சொல்வதால் பலனில்லை, முதலில் ஒரு சங்கத்தை உருவாக்குவோம்; தொழிற் சங்கமாகப் பதிவோம், அச்சங்கமூலம் எங்கள் கோரிக்கையை அரசாங்கத்திற்குத் தெரிவிப்போம்'' எனக் குறிப்பிட்டார்.

அடுத்துப்பேசிய புலவர் தமிழ்மாறன் (சோ. கனகரத்தினம்) அவாகள் "இப்பிரச்சனை தொழிலாளர்களைமட்டும் பாதிப்பதன்று, ஒவ்வொரு முதலாளியையும் பாதிக்கிறது, எனவே அவர்களும் எங்களோடு சேர்ந்து ஏகோபித்த குரலெழுப்பவேண்டும்" எனக்குறிப்பிட்டார்.

திரு. க. வீரகத்திப்பிள்ளை, சி பாக்கியநாதன், திரு. கா. இரகுநாதன், திரு சி. சிவபாதசுந்தரம், சி அமிர்தலிங்கம் முதலாகப் பலதொழிலாளர்கள் இக்கோரிக்கையை வற்புறுத்திப் பேசினர்.

நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. விபரம் பின்வருமாறு:- போஷகர்: திரு. நம. சிவப்பிரகாசம், தலைவர்: திரு. சி. நாகராசா, உபதலைவர்: திரு த. செல்லையா, இணைச் செயலாளர்கள்; திருவாளர்கள் சி. சிவபாதசுந்தரம, க. வீரகத்திப்பிள்ளை, தனாதிகாரி: திரு. சி. சண்முகம், உபதனாதிகாரி: திரு.செ. பாலசிங்கம், அச்சுக்கூடத்திற்கு ஒருவர் நிர்வாக உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையறிக்கை

# வித்தியாசாலைகளிற் சமயக் கல்வி

வெள்ளையறிக்கையில் சமயக் கல்வி சம்பந்தமாக சேர்க்கப்பட்ட குறிப்புகளைக் கீழே காண்க. இக் கொள்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இலங்கையின் தென்பகுதியில் அவற்றை செயல்முறையிலாற்றவும் ஆரம்பித்துவிட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளிலும் சைவப் பிள்ளைகள் பொருட்டு அவை நடைமுறையில் கொண்டுவரப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையும் சைவப்பிள்ளைகளுடைய சமயக் கல்விக்கு ஷ கொள்கைகள் சாதகமாயிருக்குமெனக் கருதி அவற்றை ஆதரிக்கின்றது.

34 தனித்தியங்கும்பாடசாலைகளுட்பட எல்லாப்பாடசாலைகளிலும் சமய பாடம் கற்பிக்கப்பட வேண்டும்

35. ஒவ்வொரு பிள்ளைக்கும், அப்பிள்ளையினுடைய பெற்ருர் அநுசரிக்கும் சமயம், அச்சமயத்தை அநுட்டிப்பவரும் வித்தியா பகுதியால் அங்கீகரிக்கப்பட்டவருமான ஓர் ஆசிரியரால் கற்பிக்கப்படும்,

36. பெருந்தொகையான பிள்ளைகளுடைய சமயத்தை அநுட்டிக்கும் ஓர் ஆசிரியரே ஒரு பாடசாலையில் தலைமை ஆசிரியராக நியமிக்கப்படுவர்.

37. ஒருபாடசாலையில் பல்வேறு சமயங்களை அநுட்டிக்கும் பிள்ளைகள் கல்விகற்கச் சேர்க்கப்பட்டால் அவ்வச் சமயத்தைச் சார்ந்த பிள்ளைகளின் தொகைகளின் வீதப்படி அவ்வச் சமயத்தைச்சார்ந்த ஆசிரியர்கள் அப்பாடசாலையில் நியமிக்கப்படுவர்.

38. ஒவ்வொருசமயபாடத் திட்டத்தைத் தயாரிக்கவும் பரீட்சைகளை நடத்தவும் வேண்டிய ஒழுங்குகளைப்பற்றிக் கல்வியதிகாரிக்கு ஆலோசனை கூறவும் ஒரு ஆலோசனைச் சபை நிறுவப்படும்,

தனித்தியங்கும் பாடசாலைகளுக்குரிய நிபந்தனைகள் பின்வருமாறுள்ளன.

11. ஒவ்வொரு பிள்ளைக்கும் அப்பிள்ளையின் பெற்ருரின் சமயம் போதிக்கப்படல் வேண்டும்.

14. முன்னர்க் காட்டப்பட்ட 37ம் இலக்கத்தில் காட்டிய விதியின்படி ஆசிரியர்கள் வெவ்வேறு சமயங்களை அநுட்டிக்கும் பிள்ளைகள் தொகைகளின் வீதப்படி நியமிக்கப்படவேண்டும்

13-9 64 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் சைவபரிபாலன சபையாரால் நாவலர் மண்டபத்தில் நடத்தப்படும் வெள்ளையறிக்கை சம்பந்தமான கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் அன்பர்கள் முன்னரே இவற்றைப் படித்துக்கொள்வதற்காகஇக் குறிப்புகள் இவ்விதழில் பிரசுரிக்கப்படுகின்றன.

---

## சைவத்தொண்டரின் மறைவு

சண்டிலிப்பாய் திரு மு அருளம்பலம்அவர்கள் தமது 85 வது வயதில் (31-7-64ல் அன்று) சிவபதமடைந்தனர். இவர் இளமையில் சண்டிலிப்பாய் சைவப்பாடசாலையிலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியிலும்கொழும்பு ஸென் தோமஸ் கல்லூரியிலும் கல்வி பயின்றவர்.

இலங்கைப் புகையிரதப் பகுதியில் கடமையாற்றிய பின் நீர்கொழும்பு உணுப்பிட்டி ஆலையில் சிருப்பராகக் கடமையாற்றினர் கடவுள் பக்தி, பொறுமை, ஈகை முதலிய பண்புகள் நிறைந்தவர் சைவ சமய வளர்ச்சிக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் நீர்கொழும்பில் அருந்தொண்டாற்றியவர். நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயகராலய பரிபாலனசபையில் முக்கிய அங்கத்தவராகக் கடமை பூண்டனர். நீர்கொழும்பு இந்து வாலிபசங்கத்தைத் தாபிக்க மூலகாரணமாகவுள்ளவர். இச் சங்கமே நீர்கொழும்பு விவேகானந்த வித்தியாசாலையையும் நிறுவியதென்பதும் குறிப்பிடத் தக்கது. இவர் ஆயுள்பரியந்தம் இந்துசாதனப் பத்திரிகையின் சந்தாதாரராக விருந்து சைவபரிபாலனசபையையும் ஆதரித்தனர்.

---

(இந்துசமயம்) மாதிரி வினவிடை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இருவர்க்கும் நடுவே தோன்றிப் பல அறிவுரைகளைக் கூறிச் சமாதானப்படுத்த முயன்ருர். முயற்சி பலிக்கவில்லை. போர் மேலும் வளர்ந்துகொண்டே போனது. சிவபெருமான் இவர்களது ஆணவத்தை அடக்கக் கருதி ஓர் அக்கினித் தூணுக இருவர் மத்தியில் தோன்றினுர் அப்போது நாரதர் உங்கள் இருவரில் யார் இதன் அடி முடிகளில் ஒன்றை முதலிற் காணுகின்ருரோ அவரே முதற்கடவுளாவர்என்றுகூற, திருமால் பன்றி வடிவெடுத்துக் கீழ் ஏழ் உலகங்கள் எங்கும் தேடிச்சென்ருர் பல காலம் முயன்று தேடியும் சுடரின் அடியைக் காணுது இளைத்து மீண்டார். பிரமா அன்னப்பறவையின் வடிவெடுத்து சுடரின் முடியைக் காண மேலுலகங்கள் எங்கும் தேடிச் சென்ருர். ஈற்றில் அவரும் சுடர்முடிகாணுதவராய் இளைத்துச் சளைத்துத் திருமால் இருந்த இடத்தை வந்தடைந்தார். சிவபெருமான் சுடருக்கண்மையாகத் தோன்றி இருவருக்கும் திருவருள் புரிந்தார். மாலும் மறைவல்ல நான்முகனும் தத்தம் அகந்தை அடங்கப் பெற்றவராய்ச், சிவபெருமானே முழுமுதற் கடவுள் எனக் கொண்டு அவரது திருவடிகளைப் போற்றிப் பூசிக்கலாயினர்

இவ்வரலாற்ருற் பெறப்படும் உண்மை

இறைவன் தாமே முழுமுதற் கடவுளென்பதும், தம்மையறியாது தருக்கித்து எழுவாரின் ஆற்றலை அடக்கி அகந்தையை ஒழிப்பாரென்பதும் தம்மையறிந்து வழிபடுவார்க்குத் தம் திருவடிநீழலைக் காட்டி இன்ப வாழ்வு பெறச் செய்வாரென்பதுமாம்.

(தொடரும்)

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
யாழ்ப்பாணம்,
செம்மணி ரோட் ராணி வீதி
1. யோன் ஏபிறகாம் பெண்
2. போகம்மா
—வழக்காளிகள்

இல. M B. 5098

எதிராக

யாழ்ப்பாணம், 15-ம் நம்பர்,
ஈச்சமட்டை ரோட்
1. யோசெப் யோன்பிள்ளையும் பெண்
2. அடைக்கலமும்
—எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் இல. M.B. 5098-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1964ஞு ஐப்பசிமீ 3உ சனிக்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2825/- இதில் ரூபா 2000-க்கும் 24-9-62 தொடக்கம் 20-5-63 வரைக்கும் 100-க்கு 15 வீத வட்டியையும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 279/05. இதில் ரூபா 1000-ம், கோட்டுச் செலவால் ரூபா 125 கொடுபட்டது.

காணி விபரம்,

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக், யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சுண்டிக்குளி இறை, "புதத் தோட்டம்' கில. பர. 4, குளி 9 இதில் மேற்குப்பக்கமாக மூன் அறுதி விற்ற 9 குளியை நீக்கி நிந்தமாக மிகுதி ஆதனம் கில. பர. 1¾, செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு இதன் மிகுதி ஆதனம், வடக்கு ஒழுங்கை மேற்கு கபிரியல் மாற்றினதும் பெண் தெறசம்மாவின் ஆதனம். தெற்கு அந்தோனி அகஷ்தீனினின் உரிமைக்காரரின் ஆதனம் இதடங்கலும்.

மூற்பதிவு D 209/88.

க. சுப்பிரமணியம்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
24-ம் நம்பர், 1-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்,
15-3-1964.
M. 153 4-9-64

---

### கோட்டு விற்னவு விளம்பரம்

இல. M B. 5089

சின்னத்தம்பி இராமலிங்கம்
கைம்பெண் கண்மணி - நவாலி
—வழக்காளி

எதிராக

காலஞ்சென்ற ஆறுமுகம் முருகேசுவினதும் அவர் பெண் பொன்னுவினதும் ஆதனங்களுக்குப் பிரதிநிதியாகக் கோட்டால் நியமிக்கப்பட்ட முருகேசு சுப்பிரமணியம் - மானிப்பாய் —எதிரி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு M.B. 5089-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணி 1964-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10-ம்உ சனிக்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 821-ம் 19-9-62 தொடக்கம் 18-2-63 வரையில் ரூபா 500-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் பணம் மூற்ருக இறுபடும் வரையில் முழுக கூட்டுததொகைக்கு 5 வீத வட்டியும் ரூபா 190/15-ம்.

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய் கோவில்பற்று மானிப்பாய் இறை "இறைத்தம்பி வளவு இறைத்தப்பியும் தட்டான் தோட்டமும்" பர.கில. லாச்சம் 5¼. இதில் மேற்குப்புறமாக 2¼ பரப்பும், பயிர்களும், வடக்குப்புறமாக இருக்கும் கிணற்றில் பங்கும், வழமையான வழி வாய்க்கால் பாவிப்புரித்தும். இந்தக்காணிக்கு எல்லை கிழக்கு துரையப்பா பெண் தங்கம்மாவினது ஆதனம், வடக்கு கை ஒழுங்கை, மேற்கு நாகலிங்கம் பெண் நாகம்மாவினது ஆதனம், தெற்கு ஒழுங்கை.

க. செல்வத்துரை,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
முருகன் இல்லம்,
இணுவில், 2-9-64.
M 155 4-9-64

---

## ஸ்ரீ. வில்லூன்றி வீரகத்திவிநாயகர் ஆலயம்
## சதுர்த்தி உற்சவம்

நிகழும் குரோதிஞு ஆவணிமீ 25உ (9-9-64 புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் விநாயகப்பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனையும், பி ப. 5 மணியளவில், செல்வி ஜெகதீஸ்வரி சாம்பசிவம் அவர்கள் "கிழவியும் குழவியும்" என்னும் பொருள் பற்றிச் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்கள்.

திரு. த. சுப்பிரமணியம் அவர்கள் பெரியபுராண விரிவுரையில் "குங்கலியக்கலய நாயனுர்" சரிதம் நடைபெற்று, மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பெற்ற கண்ணுடி மஞ்சத்தில் சுவாமி வீதி வலம் வருதலும் நடைபெறும்.

---

### கோட்டு விற்பனவு

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
வழக்கு இலக்கம்: M.B. 4984
ஊர்காவற்துறை, தம்பாட்டி
தம்பிமுத்து சதாசிவம்
—வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம், அத்தியடி
1. செல்லையா ஜெகராசசிங்கமும் மனைவி
2. மகேஸ்வரியும்
—எதிராளிகள்.

இவ்வழக்கில் எனக்குககிடைத்த உத்தரவின்படி கீழ்க்காணும் ஆதனம் 1965-ம்ஞு அக்டோபர்மீ 10உ (10-10-64) சனிக்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1595/- மேலும் 4-8-62 தொடக்கம் 28-5-63 வரைக்கும் ரூபா 1000-க்கு வருடமொன்றுக்கு 12%வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 5%வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 182-60 சதமும்

ஆதன விபரம்:

வடமாகணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்புக்கோவிற் பற்று சிறுவிளான் இறை "பணிக்கன் வளவு' கிலப்பரப்பு 4 1/2, பனைகளும் வடலிகளும். இதற்கு எல்லை கிழக்கு சின்னதம்பி சிதம்பரப்பிள்ளைக்கும் மறு பேர்களுக்கு முரிய ஆதனம் வடக்கு வல்லிபுரம் மனைவி கண்ணகையினுதனம். மேற்கு பண்டாரம் கந்தப்பிள்ளையினுதனம். தெற்கு சவரிமுத்து மனைவி விக்டோரியாவுக்கும் பங்காளர்களுக்கும் முரிய ஆதனம், இது முழுவதும் யாழ்ப்பாணம் பதிவு E 179/219

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.
ஏலவிற்பனவாளரும்,
விலைமதிப்பாளரும்,
643 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 22-8-64.
M 150 4-9-64

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

கோப்பாய், கோப்பாய் தெற்கு
டேவிட் தம்பிரத்தினம் ஊதர்
—வழக்காளி.

இல, M,B. 4326

எதிராக

யாழ்ப்பாணம்,
26, இலந்தைக்குளம் ரோட்
1. கந்தையா செல்லததுரையும் பெண்
2. செல்லம்மாவும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B 4326-ம இலக்க வழக்கில் எனக்குக்கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் 2 துண்டுக்காணிகளை 1964-ம்மீ ஐப்பசிமீ 10-ம்உ (10-10-64) சனிக்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிகளுக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 2340-ம் 12-10-61 தொடக்கம் 18-1-62 வரைக்கும் ரூபாய் 1500-க்கு 14 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 212/70-ம்,

ஆதன விபரம்:

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குழிக் கோவிற்பற்று கொழும்புத்துறை இறை. "பெரியபுலம்" நிலப்பரப்பு நாலு வீடும், குசினி, கிணறு, பயிர் வகைகளும் எல்லை கிழக்கு தம்பிப்பிள்ளை பெண் செல்லம்மாவினதும் விருத்தப்பி கந்தையாவின் உரிமைக்காரரினதும் ஆதனம், வடக்கு செல்லத்தம்பி சிவசுப்பிரமணியத்தினுதனம். மேற்கு ரோட்டு, தெற்கு தம்பிப்பிள்ளை மகள் சிவகாயகியினுதனம். பதிவு D 199/79,

2. ஷ இறை "பெரியபுலம்" கிலப்பரப்பு மூன்றரை. பயிர் வகைகளும். தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றிற்பங்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு ஒழுங்கையும சின்னத்தம்பி பெண் அன்னப்பிள்ளையினுதனமும். மேற்கு கனகரத்தினம் பெண் சின்னம்மாவினுதனம், தெற்கு இராசதுரை பெண் இலட்சுமியினதும் முருகேசு தப்புவினதும் ஆதனம். பதிவு D 149/80,

அ. வெற்றிவேலு
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்,
M. 157 4-9-64.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 5554.

கந்தையா ஐயரத்தினம்,
உண்ணர்பண்ணை மேற்கு
—வழக்காளி

எதிராக

1, அருணுசலம் இராசரத்தினம் மனைவி
2. ராசமணி, இணுவில்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு M. B. 5554-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு காணிகளும் முதல் காணி 1964-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3-ம் திகதி சனிக்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கத்திலும், 2-ம் காணி 5-ம் திகதி திங்கட்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கத்திலும் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:- ரூபா 8668-ம். 9-4-63 தொடக்கம் 17-12-63 வரையில் ரூபா 7000-க்கு 11வீத வட்டியும் அதன்பின் பணம் மூற்ருக இறுபடும் வரையில் முழுக்கூட்டுத் தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 317/85-ம்,

ஆதனடாப்பு:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்வலிகாமம் வடக்கு உடுவில் கோவில்பற்று இணுவில் இறை "மிதியன்" பர. கில, லாச்சம் 3 குளி 5. இதில் நிந்தமாக பர. கில. லாச்சம் 1, குளி 3. கில அளவைக்காரன் N. தம்புவால் 1961-ம் ஆண்டு மாசிமாதம் 10-ம் திகதி தயாரிக்கப்பட்ட 1157-ம் இலக்கம் கொண்ட படத்தின்படி முதலாம் துண்டு, இந்தப் பர. கில. லச்சம் 1, குளி 3-க்கு எல்லை கிழக்கு நடராசா பெண் சின்னுச்சிக் குரிய ஆதனம், வடக்கு பொன்னையாவின் ஆதனம், மேற்கு அம்பலவாணர் இராசையாவின் ஆதனம். தெற்கு துரைராசா பெண் செல்லம்மாவின் உரிமைக்காரரின் ஆதனமும். படத்தில் 3-ம் துண்டெனச் சொல்லப்பட்ட பாதையும், மூற்பதிவு H 338/228.

2. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு, வட்டுக்கோட்டை கோவிற்பற்று,வட்டுக்கோட்டை இறை "திருவிளக்கை" பர, கில. லாச்சம் 6. இக்காணிக்கு எல்லை கிழக்கு வயிரவகியம் பெண் தங்கம்மாவினதும் மறுபெயர்களுடையவும் ஆதனம், வடக்கு முருகன் இளையவனினதும் பெண் சின்னப்பிள்ளையினதும் மறுபெயர்களுடையவும் ஆதனம், மேற்கு சின்னத்தம்பி நாகலிங்கத்தினதும் பெண் செல்லாச்சியினதும் ஆதனம், தெற்கு அருணுசலம் பெண் தெய்வானையினதும் மறுபெயர்களுடையவும் ஆதனம்; மூற்பதிவு: E 352/256,

க, செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
'முருகன் இல்லம்"
இணுவில், 2-9-64.
M 154 9-9-64

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரால், வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் 4-9-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org